

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
|---|
| |

Register Number: | | | | | | | | | | |

**TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series**
**This Booklet Contains**
**Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)**

**Duration: One Hour Thirty Minutes** — **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

# பகுதி-அ - பொது தமிழ்
# Part-A- General Tamil
## 9 ஆம் வகுப்பு – பாடம் – 7, 8, 9

வினாக்கள் : 1 - 100
Questions : 1 - 100

மொத்த மதிப்பெண்கள் : 150
Total Marks : 150

1. மதுரைக்காஞ்சி என்னும் நூலின் ஆசிரியர் மற்றும் பாட்டுடைத் தலைவன் முறையே?
   (A) பாண்டியன் நெடுஞ்செழியன், மாங்குடி மருதனார்
   (B) மாங்குடி மருதனார், பாண்டியன் நெடுஞ்செழியன்
   (C) மாங்குடி மருதனார், பாண்டியன் நெடுமாறன்
   (D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை, பாண்டியன் நெடுஞ்செழியன்

2. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
   1. லாவோட்சு, தாவோவியம் என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்.
   2. ஒழுக்கத்தை மையமாக வைத்து கன்பூசியஸ் சிந்தித்தார்.
   3. லா வோட்சு இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தார்.
   (A) 1, 2 சரி 3 தவறு
   (B) 1 சரி, 2, 3 தவறு
   (C) 1, 2, 3 சரி
   (D) 1, 2, 3 தவறு

3. இலக்கியங்கள் எவ்வாறு மேன்மை அடையும்?
   (A) மதம் பற்றிய கருத்துகளால்
   (B) கடவுள் பற்றிய கருத்துகளால்
   (C) அறிவியல் பற்றிய கருத்துகளால்
   (D) இயற்கை பற்றிய கருத்துகளால்

4. கீழ்கண்டவற்றுள தவறாக பொருந்தி உள்ளதை கண்டுபடி.
   (A) ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு.மேத்தா
   (B) தமிழ் பழிமொழிகள் - கி.வா. ஜகந்நாதன்
   (C) இருட்டு எனக்குப் பிடிக்கும் - ச. தமிழச்செல்வன்
   (D) எதுவுமில்லை

5. பொறிமறிர் வாரணம் -------

கூட்டுரை வயமாப் புலியோடு குழும் - இப்பாடலின் வரி இடம்பெற்றுள்ள நூல்?

(A) முத்தொள்ளாயிரம்

(B) சீவக சிந்தாமணி

(C) மதுரை காஞ்சி

(D) நரிவிருத்தம்

6. பொருத்துக.

a. மருப்பு - 1. வெற்றி

b. மடுத்து - 2. கொம்பு

c. அடிசில் - 3. சோறு

d. வெற்றம் - 4. பாய்ந்த

(A) 1 2 3 4

(B) 2 4 3 1

(C) 2 3 4 1

(D) 1 4 3 2

7. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ

வெள்ளம்தீப் பட்டது(து) எனவெரீஇப் புள்ளினம்தம்

கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ

நச்சிலைவேல் கோக்கோதை நாடு - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி

(A) உவமை அணி

(B) பிறிது மொழிதல் அணி

(C) தற்குறிப்பேற்ற அணி

(D) உயர்வு நவிற்சி அணி

8. முத்தொள்ளாயிரம் நூலைப் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

(A) வெண்பாவால் எழுதப்பட்ட நூல்

(B) இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை

(C) இந்நூலின் ஆசிரியர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக கருதப்படுகிறார்.

(D) இந்நூல் மன்னர்களின் பெயர்களை குறிப்பிட்டு சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாக பாடுகிறது.

9. இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படைப் பிரிவைப் பற்றிய கூற்றுகளில் தவறானதை கண்டறிக.
   1. இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.
   2. இதன் தலைவர் ஜான்சிராணி
   3. இதில் தமிழகப் பெண்கள் பெருமளவில் பங்கேற்கவில்லை.
   4. இதன் தலைசிறந்த தலைவர்கள் ஜானகி, இராஜாமணி

   (A) 1 சரி
   (B) 2 சரி
   (C) 3, 4 சரி
   (D) 4 சரி

10. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
    ஞாலத்தின் மாணப் பெரிது - இக்குறளில் ஈற்றுச் சீர் வாய்ப்பாடு எது?

    (A) நாள்
    (B) மலர்
    (C) காசு
    (D) பிறப்பு

11. கீழ்கண்டவைகளில் சரியானவை எவை?
    1. ஒரு பாடலில் அடிகளிலும் சீர்களிலும் முதலெழுத்து ஒன்றி அமைவது – மோனைத் தொடை
    2. அடிகளிலும் சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி அவைது – எதுகைத் தொடை
    3. அடிகள் தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது - இயைபுத்தொடை

    (A) 1,2 சரி
    (B) 2, 3 சரி
    (C) 1, 3 சரி
    (D) அனைத்தும் சரி

12. கீழ்க்கண்ட கூற்றை கவனி
    கூற்று - ந.பிச்சமூரத்தி புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.
    காரணம் - பாரதியின் வசன கவிதையை தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ந. பிச்சமூர்த்தி ஈடுபட்டார்.

    (A) கூற்று சரி காரணம் தவறு
    (B) கூற்று சரி காரணம் சரி, மேலும் காரணம் என்பது கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை
    (C) கூற்று சரி காரணம் சரி, மேலும் காரணம் என்பது கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
    (D) கூற்று தவறு காரணம் சரி

13. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடுக்கவும்.
   (A) கல்யாண்ஜியின் இயற்பெயர் கல்யாணசுந்தரம்
   (B) இவரின் பல கடிதங்கள் தொகுக்கப்பட்டு சில பறவைகள் சில இறகுகள் என்ற பெயரில் வெளியானது
   (C) ஒரு சிறு இசை என்பது இவருடைய சிறுகதைத் தொகுப்பு
   (D) அகமும் புறமும் என்பது இவருடைய கட்டுரை தொகுப்பு

14. மதுரைக்காஞ்சி என்னும் நூலை இவ்வாறும் அழைப்பர்
   (A) சிருகுவள மதுரைக் காஞ்சி
   (B) மருகுவள மதுரைக்காஞ்சி
   (C) பெருகுவள மதுரைக்காஞ்சி
   (D) தருகுவள மதுரைக்காஞ்சி

15. கீழ்கண்டவற்றுள் நேதாஜி முழக்கங்களில் சரியானதைக் கண்டறிக.
   1. செய் அல்லது செத்துமடி
   2. டெல்லி சலோ
   3. டெல்லியை நோக்கிச்செல்
   4. கத்தியை தீட்டாதே உந்தன் புத்தியை தீட்டு
   (A) 1,2 சரி
   (B) 2,3 சரி
   (C) 2,3,4 சரி
   (D) மேற்கண்ட அனைத்தும் சரி

16. தந்தையின் தலையாய கடமை எது?
   (A) தன் பிள்ளையை செல்வந்தன் ஆக்குவது
   (B) தன் பிள்ளையை பலசாலி ஆக்குவது
   (C) தன் பிள்ளையை கோழை ஆக்குவது
   (D) தன் பிள்ளையை சான்றோன் ஆக்குவது

17. நசை பெரிது உடையர், நல்கலும் நல்குவர்
   பிடிபசி களைஇய பெருங்கை வேழம் - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்
   (A) பெருங்கடுங்கோ
   (B) கண்ணகனார்
   (C) அமுதோன்
   (D) கல்யாணசுந்தரம்

18. இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலை செய் - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி எது?
(A) உருவக அணி
(B) உவமையணி
(C) பின்வருநிலையணி
(D) வஞ்சப்புகழ்ச்சி அணி

19. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. நிலைஇய | - | 1. சொல்லிசை அளபெடை |
| b. குழாஅத்து | - | 2. செய்யுளிசை அளபெடை |
| c. வாயில் | - | 3. உரிச்சொல் தொடர் |
| d. மா கால் | - | 4. இலக்கணப் போலி |

(A) 2 1 4 3
(B) 1 2 4 3
(C) 2 1 3 4
(D) 1 2 3 4

20. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. சரிந்து | - | 1. முற்றும்மை |
| b. பிடிபசி | - | 2. ஒன்றன்பால் வினைமுற்று |
| c. உருண்டது | - | 3. ஆறாம் வேற்றுமைத்தொகை |
| d. அனைவரும் | - | 4. வினையெச்சம் |

(A) 4 2 1 3
(B) 4 3 2 1
(C) 4 2 3 1
(D) 3 4 2 1

21. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
1. குறுந்தொகை கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது.
2. குறுந்தொகையின் பாடலடிகள் எட்டடி சிற்றெல்லையும் நான்கடி பேரெல்லையும் கொண்டவை
3. பெருங்கடுங்கோ, அகநானூற்றில் பாலைத்திணை பாடியதால் பாலை பாடிய பெருங்கடுங்கோ என அழைக்கப்பெற்றார்.
4. பெருங்கடுங்கோ சேர மரபைச் சேர்ந்த புலவர்

(A) 1, சரி 3, 2, 4 தவறு
(B) 1, 4 சரி 2,3 தவறு
(C) 1, 3, 4 சரி 2 தவறு
(D) அனைத்தும் சரி

22. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைச் கோக்கிள்ளி நாடு இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்றன நாடுகள் முறையே?

(A) பாண்டியநாடு, சேரநாடு

(B) சேரநாடு, சோழநாடு

(C) சோழநாடு, சேரநாடு

(D) சோழநாடு, பாண்டியநாடு

23. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை - இக்குறளில் பயின்று வந்துறள்ள அணி?

(A) சொற்பொருள் பின்வருநிலையணி

(B) வஞ்சப் புகழ்ச்சியணி

(C) சொல் பின்வருநிலையணி

(D) பொருள் பின்வருநிலையணி

24. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. நேர் | - | 1. மலர் |
| b. நிரை | - | 2. காசு |
| c. நேர்பு | - | 3. பிறப்பு |
| d. நிரைபு | - | 4. நாள் |

(A) 4 2 1 3

(B) 4 1 2 3

(C) 1 2 3 4

(D) 4 3 2 1

25. பெரியாரின் கருத்துகளில் கீழ்க்கண்டவற்றில் சரியானதைக் கண்டறிக.

1. பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 50 சதவீதம் இடஒதுக்கீடு.
2. சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும்.
3. அறிவியலுக்கு புறம்பான கருத்துக்களை கற்றுத்தரக் கூடாது.

(A) 1 சரி

(B) 2 சரி

(C) 3 சரி

(D) மேற்கண்ட அனைத்தும் சரி

26. பொருத்துக.

a. நசை - 1. பெண் யானை
b. பிடி - 2 ஒரு வகை மரம்
c. வேழம் - 3. விருப்பம்
d. யா - 4. ஆண் யானை

(A) 3 2 1 4
(B) 3 1 4 2
(C) 3 4 1 2
(D) 1 2 3 4

27. கீழ்க்கண்டவற்றுள் சரியானதைக் கண்டறிக.

1. எல்லாருடைய நாடு நமக்கு தாய்நாடு – செனக்கா
2. படுதிரை வையம் பாத்திய பண்பே – தொல்காப்பியர்
3. நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன் - அரேலியஸ்

(A) 1 சரி
(B) 2 சரி
(C) 3 சரி
(D) மேற்கண்ட அனைத்தும் சரி

28. கீழ்கண்டவற்றுள் ஸ்டாயிக்வாதிகள் கூறிய தத்துவங்களில் சரியானதைக் கண்டறிக.

1. மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்
2. பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியாது
3. வாழ்க்கை தத்துவம்
4. ஒழுக்கவியல்

(A) 1, 2 சரி
(B) 1, 3 சரி
(C) 1, 4 சரி
(D) மேற்கண்ட அனைத்தும் சரி

29. கீழ்கண்ட கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு

(A) சீவக சிந்தாமணியின் ஆசிரியர் தேவதிருத்தக்கர்.
(B) இன்பச் சுவை மிக்க இலக்கியமும் இயற்ற முடியும் என்று நிறுவும் வகையில் சீவக சிந்தாமணி இயற்றப்பட்டது.
(C) சீவக சிந்தாமணி ஆசிரியரின் நூற்றாண்டு 10.
(D) நரிவிருத்தம் பாடுவதற்கு முன்னோட்டமாகவே சீவகசிந்தாமணி பாடப்பட்டது.

30. ந. பிச்சமூர்த்தி பணியாற்றிய துறை?

(A) வழக்குரைஞர்

(B) இந்திய சமய அறிலைய பாதுகாப்பு துறை அலுவலர்

(C) ஹனுமான், நவ இந்தியா ஆகிய இதழ்களின் துணையாசிரியர்

(D) இவை அனைத்தும்

31. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | கலித்தளை | – 1. | கூவிளங்கனி |
| b. | ஒன்றிய வஞ்சித்தளை | – 2. | கனிமுன் நிரை |
| c. | ஒன்றாத வஞ்சித்ளை | – 3. | காய்மன் நிரை |
| d. | நேர் நிரை நிரை | – 4. | கனி முன் நேர் |

(A) 1 2 4 3

(B) 1 2 3 4

(C) 3 2 4 1

(D) 3 4 2 1

32. கீழ்கண்டவற்றுள் எது நா.முத்துக்குமாரின் கவிதை வரிகள்

(A) நசுங்கி போனது அடுத்த மனிதர்கள் மீதான அக்கறை

(B) பிம்பங்கள் அற்ற தன்மையில் ஒன்றிலொன்று முகம் பார்த்தன சலூன் கண்ணாடிகள்

(C) வெட்டுக்கிளியின் சப்தத்தில் மலையின் மௌம் ஒரு கணம் அசைந்து திரும்புகிறது

(D) இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்

33. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. அச்சம் இல்லாத நாடு – பாண்டிய நாடு
2. போர்க்கலை சிறப்பு உடைய நாடு – சேர நாடு
3. முத்து உடைய நாடு – சோழ நாடு

(A) 1, 2 சரி 3 தவறு

(B) அனைத்தும் சரி

(C) அனைத்தும் தவறு

(D) 1,3 சரி 2 தவறு

34. கீழ்க்கண்டவற்றுள் எது நேதாஜியின் பொன்மொழிகள்
   1. சுதந்திரத்தின் விலை துன்பமும் தியாகமும் தான்
   2. எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்கு போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்
   3. டெல்லி சலோ

(A) 1 சரி
(B) 2 சரி
(C) 3 சரி
(D) மேற்கண்ட அனைத்தும் சரி

35. கீழ்கண்டவைகளில் சரியானவை எது?
   1. சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி இலக்கண இயல்பாகும்
   2. உவமையின் தன்மையை பொருள் மேல் ஏற்றி கூறும் இத்தன்மையை உருவகம் எனக் கூறப்படும்
   3. ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டு பல இடங்களிலும் வருதலே பின்வருநிலை அணியாகும்

(A) 1 சரி
(B) 2 சரி
(C) 3 சரி
(D) அனைத்தும் சரி

36. இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல் - என்ற ஹைக்கூ கவிதையின் ஆசிரியர்

(A) கல்யாண்ஜி
(B) நா.முத்துகுமார்
(C) பாஷோ
(D) அமுதோன்

37. வெட்டுக்கிளியின் சப்தத்தில்
மலையின் மௌனம்
ஒரு கணம் அசைந்து திரும்புகிறது – என்ற கவிதையின் ஆசிரியர்

(A) பாரதியார்
(B) நா.முத்துகுமார்
(C) பாஷோ
(D) அமுதோன்

38. கீழ்கண்டவைகளில் நிரையசைக்குரிய பண்புகளில் பொருந்தாதது எது?
   (A) இருகுறில் - அணி
   (B) இருகுறில், ஒற்று – அணில்
   (C) குறில், நெடில், ஒற்று – விழார்
   (D) தனிநெடில், ஒற்று – கால்

39. கீழ்கண்ட கூற்றுகளில் தவறானது எது
   (A) சீவக சிந்தாமணி விருத்தப்பாக்களால் இயறப்பட்ட முதல் காப்பியம்
   (B) இலம்பகம் என்ற உட்பரிவுகளைக் கொண்டது
   (C) 11 இலம்பகங்களை கொண்டுள்ளது.
   (D) சீவக சிந்தாமணி மணநூலு; எனவும் அழைக்கப்படுகிறது.

40. கீழ்கண்டவைகளில் சரியானவை எவை?
   1. காய்ச்சீர்களை வெண்சீர்கள் என்று அழைக்கிறோம்
   2. மூவசைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்
   3. நிரை நேர் நிரை – புளிமாங்காய்
   4. நிரை நிரை நேர் - கருவிளங்கனி
   (A) 1, 2 சரி
   (B) 2, 3 சரி
   (C) 3, 4 சரி
   (D) அனைத்தும் சரி

41. குறுந்தொகைப் பாடல்களின் அடிவரையறை
   (A) நான்கடி சிற்றெல்லை எட்டடி பேரெல்லை
   (B) எட்டடி சிற்றெல்லை நான்கடி பேரெல்லை
   (C) மூன்றடி சிற்றெல்லை எட்டடி பேரெல்லை
   (D) மூன்றடி சிற்றெல்லை ஆறடி பேரெல்லை

42. கீழ்கண்டவற்றுள் சரியானதைக் கண்டறிக.
   1. விந்திய மலைக்கும், இமயமலைக்கும் இடைப்பட்ட பகுதி கருமபூமி
   2. வீடுபேறு அடைவதற்கு கருமபூமியில் பிறக்க வேண்டும்
   3. தருமசாத்திர நூல்கள் பிறர் நலத்தை பற்றி கவனம் கொள்ளவில்லை
   (A) 1 சரி
   (B) 2 சரி
   (C) 3 சரி
   (D) மேற்கண்ட அனைத்தும் சரி

43. பொருத்துக.

a. நேர் நேர் - 1. புளிமா

b. நிரை நேர் - 2. தேமா

c. நிரை நிரை - 3. கூவிளம்

d. நேர் நிரை - 4. கருவிளம்

(A) 1 2 3 4

(B) 4 3 2 1

(C) 2 1 4 3

(D) 2 4 1 3

44. பொருத்துக.

a. மணப்பாறை – 1. காய்கறிசந்தை

b. அய்யலூர் – 2. ஆட்டுச்சந்தை

c. ஈரோடு – 3. மாட்டுச்சந்தை

d. ஒட்டன்சத்திரம் – 4. ஜவுளிச்சந்தை

(A) 3 2 4 1

(B) 1 2 3 4

(C) 2 3 4 1

(D) 2 3 1 4

45. பொதியை ஏத்தி வண்டியிலே பொள்ளாச்சி சந்தையிலே எனத் தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்.

(A) வாணிதாசன்

(B) மருதகாசி

(C) கண்ணதாசன்

(D) முயடிரசன்

46. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே - இவ்வடிகள் உணர்த்தும் பொருள் யாது.

(A) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுந்திருந்தனர்

(B) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

(C) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

(D) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

47. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று: இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான் இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான் என்றார்

காரணம்: இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்

(A) கூற்று காரணம் சரி

(B) கூற்று காரணம் தவறு

(C) கூற்று தவறு காரணம் சரி

(D) கூற்று சரி காரணம் தவறு

48. பொருத்துக.

a. இந்திய தேசிய இராணுவம் - 1. Sugarcane Juice

b. பண்டமாற்று முறை - 2. Classical Literature

c. காய்கறி வடிசாறு - 3. Vegetable soup

d. செவ்வியல் இலக்கியம் - 4. Commodity Exchnage

e. கரும்புச்சாறு - 5. Indian National Army

(A) 1 2 3 4 5

(B) 5 4 3 2 1

(C) 5 3 4 1 2

(D) 2 1 4 5 3

49. தந்தை பெரியாரின் சிறப்பு பெயர்கள் என்ன?

(A) பகுத்தறிவு பகலவன், சுயமரியாதைச்சுடர்

(B) தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்

(C) புத்துலக் தொலை நோக்காளர், பெண்ணினப்போர் முரசு

(D) அனைத்தும் சரி

50. பெரியார் பங்கு கொண்ட பேராட்டங்களில் தவறானது எது.

(A) இந்தித்திணிப்பு, தேவதாசி முறை

(B) குலக்கல்வித்திட்டம், கள்ளுண்ணல்

(C) குழந்தைத் திருமணம், மணக்கொடை

(D) தண்டியாத்திரை, குற்றப்பரம்பரைச் சட்டம்

51. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – கல்வியை சமூக வளர்ச்சிக்கு மிகச்சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார்.
கூற்று 2 – தற்சிந்தனை ஆற்றலையும் தன்னம்பிக்கையும் வளர்க்கும் கல்வியினைக் கற்றுத்தர வேண்டும் என்றவர் பெரியார்.
(A) கூற்று 1 2 சரி
(B) கூற்று 1 2 தவறு
(C) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

52. பொருத்துக.
a. விண் - 1. வானம்
b. ரவி - 2. பாக்கு
c. கமுகு - 3. கதிரவன்
(A) 1 3 2
(B) 2 3 1
(C) 1 2 3
(D) 3 2 1

53. வல்லிக்கண்ணன் தான் எழுதிய நூலில் பிச்சமூர்த்தியை பற்றிக் கூறியுள்ளார்.
(A) எழுத்து
(B) புதுக்கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும்
(C) செந்தாமரை
(D) விளக்கு

54. முண்டி மோதும் துணிவே இன்பம்
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி – என்ற பாடலின் இயற்றியவர் யார்.
(A) கலாப்பிரியா
(B) அப்துல் ரகுமான்
(C) ஞானக்கூத்தன்
(D) ந.பிச்சமூர்த்தி

55. பொருத்துக.
a. அறம் - 1. மேற்கொண்ட நன்நெறி
b. வெகுளி - 2. அறிவு
c. ஞானம் - 3. சினம்
d. விரதம் - 4. நற்செயல்
(A) 3 4 2 1
(B) 1 2 3 4
(C) 4 3 2 1
(D) 4 1 2 3

56. ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனனில் வெகுளி போக்குக – என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது.
(A) யசோதர காவியம்
(B) உதயகுமார காவியம்
(C) நாககுமார காவியம்
(D) நீலகேசி

57. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. இரண்டு சீர்கள் | – | 1. அளவடி |
| b. மூன்று சீர்கள் | – | 2. நெடிலடி |
| c. நான்கு சீர்கள் | – | 3. குறளடி |
| d. ஐந்து சீர்கள் | – | 4. சிந்தடி |

(A) 1 2 3 4
(B) 3 1 2 4
(C) 3 4 1 2
(D) 4 3 2 1

58. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று: பெரியார் உயிர் எழுத்துகளில் ஐ என்பதனை அய் எனவும், ஔ என்பதனை அவ் எனவும் சீரமைத்தார்
காரணம்: சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.
(A) கூற்று சரி காரணம் தவறு
(B) கூற்று காரணம் இரண்டும் சரி
(C) கூற்று காரணம் இரண்டும் தவறு
(D) கூற்று தவறு காரணம் சரி

59. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. எழுத்துச் சீர்திருத்தம் | – | 1. Syllable |
| b. எழுத்துரு | – | 2. Reforming the letter |
| c. மெய்யியல் (தத்துவம்) | – | 3. Font |
| d. அசை | – | 4. Philosophy |

(A) 1 2 3 4
(B) 2 4 3 1
(C) 2 3 4 1
(D) 4 3 2 1

60. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் மூன்று வகைப்படும்
கூற்று 2 – சீர் நான்கு வகைப்படும்
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

61. கோர்டன் ஆல்போர்டின் மூன்று இலக்கணங்கள் எவை?
(A) ஈடுபாடுகளை வளர்த்தல்
(B) அறிந்து கொள்ளும் ஆற்றல்
(C) வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைபிடித்தல்
(D) அனைத்தும் சரி

62. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 - 2012 செம்மொழி மாநாடு கோவையில் நடைபெற்றது.
கூற்று 2 - 1966 ல் முதல் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

63. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – யாதும் ஊரே யாவருங்கேளிர் என்று கூறியவர் கணியன் பூங்குன்றனார்
கூற்று 2 – நான் மனிதன், மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று என்று கூறியவர் தெறன்ஸ்
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

64. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – ஒரு சிறு இசை என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக கல்யாண்ஜி 2016 ல் சாகித்திய அகாடமி பரிசு பெற்றார்.
கூற்று 2 – தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள் என்ற சிறுகதையை எழுதியவர் கல்யாண்ஜி.
(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

65. சரியான இணை எது.

(A) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் --- ஏகதேச உருவக அணி
(B) குணம்நாடிக் குற்றம் நாடி --- சொற்பொருள் பின்வருநிலையணி
(C) பெருமைக்கம் ஏனைச் சிறுமைக்கும் - உவமையணி
(D) சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் - உருவக அணி

66. நேதாஜி தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறி இருக்கிறார். — என்று உரைத்தவர் யார்

(A) இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவர் தில்லான்
(B) படை வீரர் அப்துல் காதர்
(C) கேப்டன் மோகன் சிங்
(D) பசும்பொன் முத்துராமலிங்கனார்

67. முற்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் தலையாய கடமைகளாக இருந்தவற்றுள் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(A) இல்லறத்தார்க்கு விருந்தோம்பல்
(B) சுற்றம் தழுவல்
(C) வறியோர் துயர் துடைத்தல்
(D) பெரும் செல்வம் சேர்த்தல்

68. மனதை மலர வைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா? அப்டியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக் கொள் என்று கூறியவர்

(A) இரவீந்திரநாத் தாகூர்
(B) பால கங்காதர திலகர்
(C) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்
(D) பசும்பொன் உ.முத்துராமலிங்கனார்

69. கூற்றுகளை ஆராய்க.

1. தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் உள்ள அன்பையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறுவது அகப்பொருள்
2. அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ், முதலியவற்றைப் பற்றிக் கூறுவது புறப்பொருள்
3. தொல்காப்பியர் காட்டும் அகத்திணைகள் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என ஏழு வகைப்படும்.
4. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, நொச்சி, காஞ்சி, பாடாண் என ஏழு புறத்திணைகள் உள்ளதாக தொல்காப்பியர் கூறுகிறார்

(A) 1, 2, 3 சரி 4 தவறு
(B) 1, 2, 4 சரி 3 தவறு
(C) 1, 3, 4 சரி 2 தவறு
(D) 2, 3, 4 சரி 1 தவறு

70. பொருத்துக. (யசோதர காவியம்)

a. ஆக்குவது – 1. விரதம்
b. போக்குவது – 2. ஞானம்
c. நோக்குவது – 3. வெகுளி
d. காக்குவது – 4. அறம்

(A) 4 3 2 1
(B) 3 2 1 4
(C) 4 2 3 1
(D) 3 2 4 1

71. பொருத்துக.

a. இரண்டு சீர் – 1. சிந்தடி
b. மூன்று சீர் – 2. கழிநெடிலடி
c. நான்கு சீர் – 3. குறளடி
d. ஐந்து சீர் – 4. நெடிலடி
e. ஆறு சீர் – 5. அளவடி

(A) 3 1 5 4 2
(B) 4 1 2 3 5
(C) 2 1 3 4 5
(D) 3 1 2 4 5

மனிதநேயம் வளர்ப்போம் மானுடம் மீட்போம்
மனிதநேய அறக்கட்டளை
சைதை சா. துரைசாமியின்

72. கூற்றுகளை ஆராய்க.

1. நான் மனிதன் மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று - இலத்தீன் புலவர் தெறென்ஸ்
2. குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப்பிண்டம் என்பதைப் பூட்கையில்லோன் யாக்கை போல என அகநானூற்றில் ஆலத்தூர் கிழார் கூறுகிறார்.
3. முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றயமையாதவை – உளநூல் வல்லுநர் கோர்டன் ஆஸ்போர்ட்
4. யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் - நாலடியார்

(A) கூற்று 1 2 சரி
(B) கூற்று 2 4 சரி
(C) கூற்று 1 3 சரி
(D) கூற்று 3 4 சரி

73. கூற்றுகளை ஆராய்க.
   1. குறுந்தொகை பாடல்கள் பலவும் இயற்கை காட்சிகள் மூலம் நாட்டு வளத்தைப் பாடம்பிடித்து காட்டுவன.
   2. குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து உட்பட 401 பாடல்கள் உள்ளன.
   3. குறுந்தொகை தமிழர் வாழ்வின் புறப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது.

   (A) 1, 2, 3 சரி
   (B) 1 சரி 2, 3 தவறு
   (C) 1 தவறு 2, 3 சரி
   (D) 1, 2 சரி 3 தவறு

74. மன்னர்க்கு உரிய கூத்து ----, மற்றவர்க்குரிய கூத்து ----
   (A) வேந்தனியல், பொதுவியல்
   (B) வேத்தியல், பொதுவியல்
   (C) அரசனியல், புறவியல்
   (D) வேந்தனியல், புறவியல்

75. பொருத்துக. திணை – துறை எண்ணிக்கை
   a. வெட்சி – 1. பன்னிரண்டு
   b. வஞ்சி – 2. எட்டு
   c. உழிஞை – 3. பதின்மூன்று
   d. தும்பை – 4. பதினான்கு

   (A) 1 2 3 4
   (B) 1 3 2 4
   (C) 4 3 2 1
   (D) 4 2 3 1

76. மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இன்று மதத்தின் நிலை என்ன? மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவே? பிரித்து வைப்பதற்காகவா? என்று வினவியவர்.
   (A) பெரியார்
   (B) அண்ணா
   (C) முடியரசன்
   (D) பாரதிதாசன்

77. யசோதர காவியம் குறித்த கூற்றுகளில் தவறானது எது
   (A) இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப்பெற்றது
   (B) யசோதரை என்ற பெண்ணின் வரலாற்றைக் கூறும் நூல்
   (C) இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்று கூறுவர்
   (D) இந்நூல் ஐஞ்சிறுங்காப்பியங்களுள் ஒன்று ஆகும்.

78. கூற்றுகளை ஆராய்க.
   1. தளைகள் ஒன்றியும் ஒன்றாமலும் வரலாம்
   2. மா முன் நேர் என்பது நேரொன்றாசிரியத்தளை
   3. மா முன் நிரை, விளம் முன் நேர் என்பது இயற்சீர் வெண்டளை ஆகும்.
   (A) கூற்று 1 தவறு
   (B) கூற்று 2 தவறு
   (C) கூற்று 3 தவறு
   (D) கூற்று 1, 2, 3 சரி

79. குறுந்தொகை முதன்முதலில் எந்த ஆண்டு, யாரால் பதிப்பதிக்கப்பட்டது.
   (A) 1932, உ.வே.சா
   (B) 1917, பிள்ளைப்பெருமாள்
   (C) 1915 சௌரிப் பெருமாள் அரங்கனார்
   (D) 1922, இளம்பூரணார்

80. தமிழ் சான்றோன் சமுதாயத்திலேயே வாழந்து தன்னால் இயன்றவரை சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான் - என்று கூறியவர் யார்?
   (A) தனிநாயகம் அடிகள்
   (B) தேவநேயப் பாவாணர்
   (C) சாலை இளந்திரையன்
   (D) சாலினி இளந்திரையன்

81. உவமை, உவமேயம் என்னும் இரண்டு ஒன்றே என்று தோன்றக் கூறுவது எந்த அணி?
   (A) உவமை அணி
   (B) உருவக அணி
   (C) எடுத்துக்காட்டு உவமை அணி
   (D) பிறிதுமொழிதல் அணி

82. தமிழர் சமுதாயம் குறித்த கூற்றுகளை ஆராய்க.

1. உண்பது நாழி உடுப்பவை இரண்டே – எளிய வாழ்க்கை
2. செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்த்தல் - உயர்பண்பு
3. கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதுவும் குறைபடாது – கொள்கைக் சிறப்பு
4. யாதும் ஊரே யாவரும் கேளிர் - உலகப் பொதுமை

(A) 1, 2, 3 சரி
(B) 2, 3, 4 சரி
(C) 1, 2, 4 சரி
(D) அனைத்தும் சரி

83. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. குறிஞ்சி | - | 1. திருமால் |
| b. முல்லை | - | 2. கொற்றவை |
| c. மருதம் | - | 3. வருணன் |
| d. நெய்தல் | - | 4. முருகன் |
| e. பாலை | - | 5. இந்திரன் |

(A) 3 4 1 5 2
(B) 4 1 5 3 2
(C) 2 5 3 1 4
(D) 5 1 4 3 2

84. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.

(A) சிலம்பு, மேகலை, குழை, கடகம்
(B) நோன்பு, நீராடல், திருநாள், விழா
(C) ஊசல், கழங்காடல், ஓரையாடல், அம்மானைப் பந்தாடல்
(D) கூத்து, பாடினி, இசை, சிற்பம்

85. பெரியாரின் சிறப்பு பெயர்கள் எவை?

1. வெண்தாடி வேந்தர்
2. வைக்கம் வீரர்
3. பகுத்தறிவுப் பகலவன்
4. பெண்ணினப் போர்முரசு

(A) 1 3 4
(B) 2 3 4
(C) 1 2 4
(D) அனைத்தும்

86. என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங்கய்யில் கிடப்பது, குறுகுறு நீட்டி என் சட்டையைப் பிடித்து இழுப்பதை, கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டு இருந்தேன் - என்ற கூறியவர் யார்.

(A) ந.பிச்சமூர்த்தி

(B) நா. முத்துக்குமார்

(C) சிற்பி பாலசுப்பிரமணியன்

(D) சாலை இளந்திரையன்

87. அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என் மலையே – என்ற வரிகள் யாருடையது.

(A) திரிகூட ராசப்ப கவிராயர்

(B) தனிநாயகம் அடிகள்

(C) குமரகுருபரர்

(D) அருணகிரி நாதர்

88. பொருத்துக. (பலபட்டடை சொக்கநாதப் புலவர்)

a. வெண்பா - 1. கம்பன்

b. பரணி - 2. ஒட்டக்கூத்தர்

c. விருத்தம் - 3. புகழேந்தி

d. கோவை, உலா, அந்தாதி - 4. சயங்கொண்டார்

(A) 2 3 1 4

(B) 1 2 3 4

(C) 3 4 1 2

(D) 4 1 3 2

89. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை
என்ற குறளில் பயின்று வந்த அணி

(A) சொல்பின்வருநிலையணி

(B) பொருள் பின்வருநிலையணி

(C) சொற்பொருள் பின்வருநிலையணி

(D) உவமை அணி

90. இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி – என்ற பாடலில் பயின்று வந்துள்ள அணி
(A) உவமை அணி
(B) உருவக அணி
(C) வஞ்சப்புகழ்ச்சி அணி
(D) சொல்பின்வருநிலையணி

91. பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே – என்ற பாடலில் பயின்று வந்துள்ள அணி
(A) வஞ்சப்புகழ்ச்சி அணி
(B) சிலேடை அணி
(C) எடுத்துக்காட்டு உவமை அணி
(D) வேற்றுமை அணி

92. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு. வண்ணதாசன் சிறுகதைகள்
(A) கலைக்க முடியாத ஒப்பனைகள்
(B) தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்
(C) ஒளியிலே தெரிவது
(D) அகமும் புறமும்

93. கூற்றுகளை ஆராய்க. பழந்தமிழரின் இல்லறம்
1. தமிழர்தம் இல்வாழ்க்கை அன்பின் வழியதாகும்
2. தலைவன் தலைவியர் செம்புலப்பெயர் நீர் போல் அன்புடை நெஞ்சம் கலந்தவர்கள்
3. இம்மைமாறி மறுமை ஆயினும் நீயாகியர் என் கணவர் என மனைவியும் நரைமுடி வரினும் தலைநாள் போன்ற அன்போடு மனைவியைப் போற்றுவதைக் கணவரும் தம் கடமையாகக் கருதினர்.
4. அறிவறிந்த மக்களைப் பெறுவது இல்லறத்தின் நற்பேறு என வாழ்ந்தனர்.
(A) 1 2 4 சரி
(B) 2 3 4 சரி
(C) 1 2 3 சரி
(D) 1 2 3 4 சரி

94. கூற்றுகளை ஆராய்க. பெரியார்
   1. பெண்கள் பொருளாதாரத்திற்காக யாரையும் சார்ந்து இருக்க கூடாது. நன்கு கல்வி கற்று சுய உழைப்பில் பொருPட்ட வேண்டும் தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும்.
   2. கைம்பெண் மறுமணம் ஆதரவு, குழந்தைத் திருமண எதிர்ப்பு, ஆண் பெண் சம உரிமைகள் போன்றவை பெரியாரின் கொள்கைகள் ஆகும்.

   (A) 1 2 சரி
   (B) கூற்று 1 தவறு 2 சரி
   (C) கூற்று 1 சரி 2 தவறு
   (D) கூற்று 1 2 தவறு

95. அடிகள்தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றி அமைவது எந்த தொடை ஆகும்.
   (A) மோனைத்தொடை
   (B) எதுகைத்தொடை
   (C) இயைபுத் தொடை
   (D) அந்தாதித் தொடை

96. சரியற்ற தொடர் எது.
   (A) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது அடி எனப்படும். இது ஐந்து வகைப்படும்
   (B) மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என தொடை 8 வகைப்படும்.
   (C) பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை ஆகும்.
   (D) திருக்குறளில் ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஓரசைச்சீராக அமையும்.

97. கூற்றினை ஆராய்க.
   கூற்று – தமிழ் இலக்கியத்தை ஆராயும் போது பிறர்நலக் கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலையும் முதன்முதலில் பரப்புவதற்கு காரணமாய் இருந்தவர்கள் தமிழ்நாட்டுப் பாணரும் புலவரும் ஆவார்கள்.
   காரணம் - பாணர்களுக்கும் புலவர்களுக்கும் சொந்த ஊர், நாடு இருந்தாலும், தமிழ் வழங்கும் இடங்களுக்கெல்லாம் சென்று அரசர்களையும், வள்ளல்களையும் வாழ்த்தி வந்ததால் தமிழ்நாடு என்ற ஒற்றுமை உணர்வு உண்டானது
   (A) கூற்று காரணம் சரி
   (B) கூற்று சரி காரணம் தவறு
   (C) கூற்று தவறு காரணம் சரி
   (D) கூற்று காரணம் தவறு

98. விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும், சுதந்திரத்தினால் உண்டாகும் மனத்திருப்தியும் வேண்டுமா? அப்படியானால் அதற்கான விலை ----- என நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் கூறினார்.

(A) மனவலிமை, தியாகம்

(B) வீரம், விவேகம்

(C) துன்பம், தியாகம்

(D) அன்பு, தியாகம்

99. ந. பிச்சமூர்த்தி எந்தெந்த இதழ்களின் துணை ஆசிரியராக பணிபுரிந்தார்.

(A) ஹனுமான், நியூ இந்தியா

(B) ஹனுமான், கலைமகள்

(C) ஹனுமான், யங் இந்தியா

(D) ஹனுமான், நவ இந்தியா

100. பண்புடைமையாவது யாவர் மாட்டும்
அவரோடு அன்பினராயக் கலந்து
ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப்
பரிதலும் பகுத்து உண்டலும் பழி நாணலும்
முதலான நற்குணங்கள் பலவும் உடைமை – என்று பண்புடைமை அதிகாரத்திற்கு உரை எழுதியவர்

(A) பரிமேலழகர்

(B) பரிப்பெருமாள்

(C) காளிங்கர்

(D) மணக்குடவர்

******